

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை நெற்குன்றம் 145 வது வட்ட செயலாளர் ப. ஆலன் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்) காரப்பாக்கம் க.கணபதி ஆகியோர் 1000 நபர்களுக்கு மதிய அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கினர். இதில் 145 வது வட்டத்திற்கு உட்பட்ட வட்டக்கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி,வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### சென்னை மாவட்ட கூட்டுறவு சங்கங்களில்

# பண்ணை சாரா கடன்களுக்கு சிறப்பு கடன் தீர்வு திட்டம்!

சென்னை, மார்ச்.2-

சென்னை மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் பண்ணைசாரா கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வு திட்டத்திற்கான சிறப்பு முகாம் சம்மந்தப்பட்ட வங்கியின் கிளைகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் மார்ச் 02ஆம் தேதி நடைபெற உள்ளதாக சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் திருமதி. ந.மிருணாளினி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பின் படி, கூட்டுறவு சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தவணை தவறிய பண்ணைசாராக்கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை இனங்களுக்கு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் கூட்டுறவு துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்றுள்ள சிறு வணிக கடன், போக்குவரத்து கடன், கைத்தறிக்கடன், தொழிற் கடன், வாணிபக்கடன்கள், பத்திர ஈட்டுக்கடன்கள், வீடு கட்டும் கடன், மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள், ஆடவர் சுய உதவிக்குழுக் கடன்கள், கூட்டுப்பொறுப்புக்குழு கடன்கள், தாட்கோ, டாம்கோ மற்றும் டாப்செட்கோ போன்ற கடன்களில் 31.12.2022 அன்று கடனை திரும்ப செலுத்த வேண்டிய காலக்கெடு முழுமையாக முடிவடைந்து தவணை தவறி நிலுவையிலுள்ள அனைத்து பண்ணைசாராக் கடன்கள் இத்திட்டத்தில் தகுதி பெறும்.

இத்திட்டத்தில் பயன் பெற கடன்தாரர், இத்திட்டத்தின் படி கணக்கிடப்பட்ட நிலுவைத்தொகையில் 25 சதவீத தொகையை அரசாணை வெளியிடப்பட்ட நாளான 13.12.2023 முதல் மூன்று மாதத்திற்குள் செலுத்தி வங்கி சங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

மீதமுள்ள 75 சதவீத தொகையை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நாளில் இருந்து 6 மாத காலத்திற்குள் அதிகபட்சமாக 6 தவணைகளுக்குள் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்ட தேதியில் இருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் முடிய அசலுக்கு 9 சதவீத சாதாரண வட்டி வசூலிக்கப்படும். கூடுதல் வட்டி, அபராதவட்டி, இதர செலவினங்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

இத்திட்டம் 13.12.2023 முதல் செயல்பாட்டுக்கு வந்து அரசாணைப்படி செப்டம்பர் 2024 வரை அமலில் இருக்கும்.

எனவே தகுதி வாய்ந்த கடன்தாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தொடர்புடைய கூட்டுறவு நிறுவனங்களை உடன் அணுகி பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# 168வது வட்டத்தில் மாபெரும் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 2-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதி 168வது வட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் இன்று (02.03.24, சனிக்கிழமை) காலை 9 மணிக்கு பூந்தமல்லி சாலை கங்கையம்மன் கோயில் அருகில் ஈக்காட்டுதாங்கலில் நடைபெறுகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மருத்துவ முகாமை துவக்கி வைக்கிறார்.

இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, தா.மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முனைவர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் ஆர். அருணகிரி டி.வி. நரசிம்மன், இரா. பால்ராஜ், வட்ட கிளைக்கழக நிர்வாகிகள் பி.சென்னப்பன், இ.தனசேகரன், எம்.ராஜி, எஸ்.அறிவானந்தம், எஸ்.தேவி, கு.வீராசாமி, கே.ராஜா ராம், ஆர். குப்பன், கு.மோகன், ஆர். ராஜ்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் 168-வது வட்டத்தை சேர்ந்த மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் , கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 168வது வட்டச் செயலாளர் நா.ராதா கிருஷ்ணன் செய்துள்ளார்.



கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி மயிலை மேற்கு பகுதி கழகம் சார்பாக தளபதி அவர்களுக்கு மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்டம் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை வழியாக கலைஞர் நினைவகம் சென்றபோது சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது தொடர்ந்து கயிலாசபுரம் பகுதியில் அமைந்துள்ள உயர் கொடி மரத்தில் கழக கொடியினை மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்,முரளி, மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி,மதி, மாமன்ற உறுப்பினர்கள் சகோதரி அ.ரேவதி, கீதா முரளி முன்னிலையில் வட்ட கழக செயலாளர் அ. தவநேசன் தலைமையில் ஏற்றி வைத்து அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### எம்.கே.பி. அண்ணாதாசன் தலைமையில்

# 91வது வட்டத்தில் அறுசுவை உணவு!

## காரம்பாக்கம் கணபதி எல்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, மார்ச் 2

தமிழ்நாட்டின் முதல்வர் கழகத்தலைவர் தளபதியாரின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (02.03.2024, சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி 91வது, வட்டகழகத்தின் சார்பில் வட்டகழக செயலாளர் எம்.கே.பி.அண்ணாதாசன் தலைமையில், 91வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆ.மாலினி முன்னிலையில் 1500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது.

விழாவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைக்கவிருக்கிறார்.

நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. மற்றும் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், ப. ஆலன், எஸ்.ஜி.மாதவன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.இ.ஸ்டாலின் எ.சி, சி.சசிகுமார், எம்.ரூபன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ராக்கேஷ், ஆர்.ரசூல் தீன், 91-வது வட்டகழக நிர்வாகிகள், தா.தாமோதரன், பி.ராஜேந்திரன், எம்.செல்வகுமார், எஸ்.கஜலட்சுமி, ஏ.அப்பாசாமி, 91-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கள், பகுதி பிரதிநிதிகள் எம்.கோபி, ஆர். ஆனந்தஜோதி, ஜெ.சௌரி, மதுரவாயல் வடக்கு பகுதி மகளிரணி அமைப்பாளர் ரா.அமுதா ராமச்சந்திரன் மற்றும் அனைத்து மாவட்ட மற்றும் பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிரணி சகோதரிகள், இளைஞரணி தம்பிமார்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.



கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலின்படி 20வது வட்டக்கழக செயலாளர் செல்வம் மற்றும் 18வது வட்டக்கழக செயலாளர் சாலை. டி.கணேசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், 2வது மண்டலக்குழு தலைவருமான டாக்டர் ஏ.வி.ஆறுமுகம் மணலி எம்.ஜி.ஆர் நகர், ஜெ.ஜெ.நகர், அண்ணாசாலை ஆகிய இடங்களில் கழக கொடியினை ஏற்றிவைத்து இனிப்பு வழங்கி பொதுமக்களுக்கு அறுசுவை உணவும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பலராம், ஆர்.டி. ரமேஷ்குமார், கேபிள்கணேசன், துர்கா கோதண்டம், தாமோதரன், தயாளன், மங்கைலட்சுமி, தரணிபாபு, மோகன்ராஜ், ஆனந்த், மகேந்திரன் மற்றும் வட்டகழக, பகுதிகழக, மாவட்டகழக நிர்வாகிகள், இளைஞரணி, மகளிர் அணி மற்றும் ஊர்பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் மாண்புமிகு **தமிழ்நாடு முதல்வர்** அவர்கள் 71-வது பிறந்தநாள்,
கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனை, நிதிநிலை அறிக்கை பற்றி விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டங்கள்...
மாவட்டச் செயலாளர் **சு.கல்யாணசுந்தரம்** M.P. அறிவிப்பு!!!



**கும்பகோணம் சட்டமன்ற தொகுதி**

| வ. எண் | பேச்சாளர் பெயர் | தேதி | கூட்டம் நடத்தும் அமைப்புகளின் பெயர் (மாநகரம், ஒன்றியம், பேரூர், மாவட்ட சார்பு அணிகள் விபரம்) | கூட்டம் ஏற்பாடு செய்பவர் |
|---|---|---|---|---|
| 1 | கரூர் முரளி | 04.03.2024 திங்கள் | கும்பகோணம் மாநகரம் பகுதி – 1 | இரா.செல்வராஜ் |
| 2 | சைதை சாதிக் | 05.03.2024 செவ்வாய் | கும்பகோணம் மேற்கு ஒன்றியம் | சு.க.முத்துசெல்வன் |
| 3 | புதுக்கோட்டை விஜயா | 07.03.2024 வியாழன் | கும்பகோணம் மாநகரம் பகுதி – 2 | இரா.கல்யாணசுந்தரம் |
| 4 | பசும்பொன் ரவிச்சந்திரன் | 09.03.2024 சனி | கும்பகோணம் மாநகரம் பகுதி – 4 | மு.கண்ணன் |
| 5 | கந்தலி கரிகாலன் | 10.03.2024 ஞாயிறு | குடந்தை மத்திய ஒன்றியம் | தி.கணேசன் |
| 6 | ஆரூர் மணிவண்ணன் | 13.03.2024 புதன் | கும்பகோணம் மாநகரம் பகுதி – 3 | டி.வி.கிருஷ்ணமூர்த்தி |
| 7 | போடி காமராஜ் | 17.03.2024 ஞாயிறு | திருநாகேஸ்வரம் பேரூர் | சி.தாமரைச்செல்வன் |
| 8 | தக்கோளம் தேவபாலன் | 20.03.2024 புதன் | சோழபுரம் பேரூர் | ஜெ.ஜப்புருதீன் |
| 9 | சென்னை அரங்கநாதன் | 29.03.2024 திங்கள் | கும்பகோணம் கிழக்கு ஒன்றியம் | ஜெ.சுதாகர் |

**திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி**

| வ. எண் | பேச்சாளர் பெயர் | தேதி | கூட்டம் நடத்தும் அமைப்புகளின் பெயர் | கூட்டம் ஏற்பாடு செய்பவர் |
|---|---|---|---|---|
| 10 | நெல்லிகுப்பம் புகழேந்தி | 11.03.2024 திங்கள் | திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம் | செ.இராமலிங்கம் எம்.பி |
| 11 | சூரியா வெற்றிகொண்டான் | 14.03.2024 வியாழன் | திருப்பனந்தாள் பேரூர் | சப்பாணி |
| 12 | சேலம் சுஜாதா | 16.03.2024 சனி | திருபுவனம் பேரூர் | ஆச்சி (எ) பஞ்சநாதன் |
| 13 | தூத்துக்குடி சரத்பாலா | 19.03.2024 செவ்வாய் | திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியம் | கோ.க.அண்ணாதுரை |
| 14 | ஆடுதுறை உத்திராபதி | 22.03.2024 வெள்ளி | திருவிடைமருதூர் பேரூர் | சுந்தர.ஜெயபால் |
| 15 | அத்திப்பட்டு சாம்ராஜ் | 23.03.2024 சனி | திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியம் | மிசா.மனோகரன் |
| 16 | பவானி கண்ணன் | 26.03.2024 செவ்வாய் | திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியம் | எஸ்.அம்பிகாபதி |
| 17 | மன்னை இளங்கோவன் | 28.03.2024 வியாழன் | வேப்பத்தூர் பேரூர் | வி.மகாலிங்கம் |
| 18 | கலைமணி பாரதி | 30.03.2024 சனி | ஆடுதுறை பேரூர் | க.நசீர் முஹம்மது<br>கோ.சி.இளங்கோவன் |
| 19 | பசும்பொன் ரவிச்சந்திரன் | 31.03.2024 ஞாயிறு | திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம் | இரா.உதயசந்திரன் |

**பாபநாசம் சட்டமன்ற தொகுதி**

| வ. எண் | பேச்சாளர் பெயர் | தேதி | கூட்டம் நடத்தும் அமைப்புகளின் பெயர் | கூட்டம் ஏற்பாடு செய்பவர் |
|---|---|---|---|---|
| 20 | ஆடுதுறை உத்திராபதி | 06.03.2024 புதன் | அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம் | தியாக.சுரேஷ்குமார் |
| 21 | ஆடுதுறை உத்திராபதி | 08.03.2024 வெள்ளி | அம்மாபேட்டை பேரூர் | தியாக.ரமேஷ் |
| 22 | பொன்னேரி சிவா | 12.03.2024 செவ்வாய் | பாபநாசம் பேரூர் | ச.கபிலன் |
| 23 | சூரியா வெற்றிகொண்டான் | 15.03.2024 வெள்ளி | சுவாமிமலை பேரூர் | S.M.S.பாலசுப்ரமணியன் |
| 24 | வண்ணை அரங்கநாதன் | 18.03.2024 திங்கள் | அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம் | P.S.குமார் |
| 25 | ஆரணி மாலா | 21.03.2024 வியாழன் | அய்யம்பேட்டை பேரூர் | T.P.T.துளசி அய்யா |
| 26 | ஈரோடு இளையகோபால் | 24.03.2024 ஞாயிறு | பாபநாசம் வடக்கு ஒன்றியம் | கோ.தாமரைச்செல்வன் |
| 27 | வரகூர் காமராஜ் | 25.03.2024 திங்கள் | மெலட்டூர் பேரூர் | V.சீனிவாசன் |
| 28 | முரசொலி மூர்த்தி | 27.03.2024 புதன் | பாபநாசம் தெற்கு ஒன்றியம் | என்.நாசர் |

குறிப்பு :- மார்ச்-1 ம் தேதி அன்று மாவட்டத்திலுள்ள மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழகங்களில் உள்ள வட்டம் மற்றும் கிளைக் கழகங்களில் கழக இருவர்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கியும். மார்ச் மாதம் முழுவதும் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழகங்கள், சார்பு அணிகளின் சார்பில் தங்களது பகுதியிலுள்ள ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், முதியோர் இல்லம் மற்றும் ஏழை – எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க** — **சு.கல்யாணசுந்தரம் M.P.** மாவட்டக் கழகச் செயலாளர்


